# Summaries in Tamil

**பங்குபற்றல் அடிப்படையிலான தரப்படுத்தல் முறைமூலம் சிரொலியோனில் ஆயுதக் குழுக்களுடன் உத்தியோக பூர்வமாக இணைந்திருந்த பெண் பிள்ளைகளை சமூகத்தில் மீழிணைத்தலிற்கான கலாசாரத்திற்குப் பொருத்தமான குறிகாட்டிகளை உருவாக்குதல்**

இந்தக் கட்டுரையானது, சமூகத்துடன் மீழிணைத்தல் பற்றிய உள்நாட்டு விளக்கம், நிகழ்ச்சித் திட்டமிடலிலும் மதிப்பிடுதலிலும் முக்கியமான விழுமியங்களின் பங்களிப்பு என்பவற்றிற்கான ஒரு பங்களிப்பு முறையிலான தரப்படுத்தல் முறையை விபரிக்கிறது. . இது குறிப்பாக, சிரொலியோனில் ஆயுதக் குழுக்களுடன் உத்தியோக பூர்வமாகத் தொடர்பிலிருந்த பெண் பிள்ளைகளை மீழிணைத்தலின்போது பிரயோகிக்கப்பட்டதாகும். பத்து சமூகங்களில் பங்களிப்பு முறையிலான தரப்படுத்தல் மற்றும் பட்டியலிடல் முறைகளைக் கொண்ட 14 கலந்துரையாடல் குழுக்கள் நடாத்தப்பட்டன. இக் கலந்துரையாடல்கள் குடும்பத்தால் கிடைத்த ஆதரவு, திருமணம், இனவாத செயற்பாடுகளில் ஈடுபாடு, வருமானமீட்டும் செயற்பாடுகளில் ஈடுபாடு என்பவை யுத்தத்திற்க்குப் பின் ஒரு பெண் பிள்ளையை சமூகத்துடன் வெற்றிகரமாக மீழிணைத்துள்ளதைக் காட்டும் குறிகாட்டிகளாக சமூகக் குழுக்கள் இனம்கண்டன. இம் முறையானது மீழிணைத்தலுக்கான கலாசாரத்துடன் தொடர்புபட்ட குறிகாட்டிகளைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு இலகுவான முறையாகவும் செயற்திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதலில் உபயோகிக்கக் கூடியதாகவும் காணப்படுகிறது.

**முக்கிய சொற்கள்:** சிரொலியோன், பிள்ளைப் போராளிகள், மீழிணைத்தல், முறைகள், குறிகாட்டிகள், கலரசாரங்களுக்கிடைப்பட்ட, மதிப்பீடு

**றுவாண்டாவில் சிறுவர்களால் தலைமை தாங்கி நடாத்தப்படும் குடும்ப சிறுவர்களின் மீழ்திறன்: உளசமூக இடையீடுகளின் போது சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவை**

மிகக் கடினமான நிலமைகளையும் கஸ்டங்களையும் எதிர்நோக்கும் பிள்ளைகளைப்பற்றி இக்கட்டுரை பேசுகிறது. றுவாண்டாவில் வாழும் சிறுவர்களால் தலைமைதாங்கி நடாத்தப்படும் குடும்பங்களின் சிறுவர்களுடன் செய்யப்பட்ட பங்களிப்புடனான ஆராட்சியின் அடிப்படையில், பிள்ளைகளின் உளசமூக நன்னிலைக்கான இடையீடுகளைத் திட்டமிடும் போது சிறுவர்களின் குரல்கள் மற்றும் திறன்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது. இவ் ஆராட்சியானது, சிறுவர்கள் ஆக்கபூர்வமான பலன்தரவல்ல பிரச்சினைக்கு முகம்கொடுக்கும் யுக்திகளைக் கொண்டுள்ளார்கள் எனக் காட்டுகிறது. சிலர் மிகக் கடினமான நிலைப்பாடுகளிலிருந்து தம்மை விடுவி த்துக்கொண்டுள்ளார்கள். சிறுவர்களிடம் வளங்களும் பொறுப்புணர்வும் ஒழுக்காமான வாழ்க்கை பற்றிய எண்ணமும் இருப்பதாக இவ் ஆய்வு காட்டுகிறது. எனினும் கஷ்டங்கள் அதிகமாகும் போது இவர்கள் மறைவிளைவுகளைத் தரக்கூடிய முகம் கொடுக்கும் யுக்திகளைக் கையாள்கிறார்கள். ஓர் சமூகம் சார் முறைமையானது முழு சமூகத்தின் நன்னிலையைக் கட்டியெழுப்பும் அதே வேளை சிறுவர்களின் இயலுமைகளையும் விருத்தி செய்தலை நோக்காகக் கொள்ள வேண்டும்- அவர்களின் நேர் விளைவு தரவல்ல முகம் கொடுக்கும் யுக்திகள், மீழ்திறன், இத்துடன் அவர்களை ஆபத்துக்குள்ளாக்கும் காரணிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏற்கனவே காணப்படும் பாதுகாப்புக் காரணிகள்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

*Summaries in Tamil*
*Intervention 2009, Volume 7, Number 1, Page 85 - 87*

இனம் காணப்பட்டு அவை மேலும் விருத்திசெய்யப்பட வேண்டும்.

**முக்கிய சொற்கள்:** உளசமூக இடையீடுகள், சிறுவர்களால் தலைமை தாங்கி நடாத்தப்படும் குடும்பங்கள், மீழ்திறன், பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் யுக்திகள், றுவாண்டா

### உளசமூக ஆற்றுப்படுத்தலில் ஆதிக்கமும் கொள்கைகளும்: ஈராக்கிலிருந்து ஜோர்டானில் அகதிகளாகயிருக்கும் மக்களுக்கு சேவை செய்த ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுபவங்களும் அவற்றின் பிரதிபலிப்புகளும்

ஜோர்டான் ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட ஆற்றுப்படுத்துனர்களின் நாளாந்த அனுபவங்களை முக்கியப்படுத்தி எழுதப்படுத்துகிறது. இக் கட்டுரையானது ஈராக்கியர்களுக்கு ஆற்றுப்படுத்தல் வழங்கிய போது இயல்பாக ஏற்பட்ட சில சுய ஒழுக்காற்றுக் குழப்பங்ககயைப் பிரதியலிக்கிறது. கொள்கைகளில் இருந்த தெளிவின்மை, குறுகிய காலத்தில் வேலைக்கமர்த்தல், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மேல் இருந்த தெளிவற்ற எதிர்பார்ப்புகள் மற்றும் ஜோர்டானிலிரந்த ஈராக்கியர்கள் தொடர்பான சிக்கல் மிகு அரசியல் சூழல் என்பவை, எழிதில் புரியாத தீர்க்க முடியாத சுய ஒழுக்காற்றுக் குழப்பங்களை ஆற்றுப்படுத்துனர் மத்தியில் ஏற்படுத்திவிட்டனவென விவாதிக்கப்படுகிறது. இக் குழப்பங்கள் தெளிவாகப் பேசப்படாத பட்சத்திலும் ஆற்றுப்படுத்துனருக்கும் உதவி பெறுனருக்கும் இடையிலான தொடர்புகள் அனைத்திலும் ஊடுருவி வியாபித்திருக்கின்றன. இதனை இனங்கண்டதுடன் இவற்றிற்கான தீர்வகள் சில முன்வைக்கப்படுகின்றன.

**முக்கிய சொற்கள்:** உளசமூக ஆற்றுப்படுத்தல், ஜோர்டான், அகதிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவை மதிப்பீடு

**உளசமூக ஆற்றுப்படுத்தலில் ஆதிக்கமும் கொள்கைகளும்: ஈராக்கிலிருந்து ஜோர்டானில் அகதிகளாகயிருக்கும் மக்களுக்கு சேவை செய்த ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுபவங்களும் அவற்றின் பிரதிபலிப்புகளும்**

ஜோர்டான் ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட ஆற்றுப்படுத்துனர்களின் நாளாந்த அனுபவங்களை முக்கியப்படுத்தி எழுதப்படுத்துகிறது. இக் கட்டுரையானது ஈராக்கியர்களுக்கு ஆற்றுப்படுத்தல் வழங்கிய போது இயல்பாக ஏற்பட்ட சில சுய ஒழுக்காற்றுக் குழப்பங்ககயைப் பிரதியலிக்கிறது. கொள்கைகளில் இருந்த தெளிவின்மை, குறுகிய காலத்தில் வேலைக்கமர்த்தல், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மேல் இருந்த தெளிவற்ற எதிர்பார்ப்புகள் மற்றும் ஜோர்டானிலிரந்த ஈராக்கியர்கள் தொடர்பான சிக்கல் மிகு அரசியல் சூழல் என்பவை, எழிதில் புரியாத தீர்க்க முடியாத சுய ஒழுக்காற்றுக் குழப்பங்களை ஆற்றுப்படுத்துனர் மத்தியில் ஏற்படுத்திவிட்டனவென விவாதிக்கப்படுகிறது. இக் குழப்பங்கள் தெளிவாகப் பேசப்படாத பட்சத்திலும் ஆற்றுப்படுத்துனருக்கும் உதவி பெறுனருக்கும் இடையிலான தொடர்புகள் அனைத்திலும் ஊடுருவி வியாபித்திருக்கின்றன. இதனை இனங்கண்டதுடன் இவற்றிற்கான தீர்வகள் சில முன்வைக்கப்படுகின்றன.

**முக்கிய சொற்கள்:** உளசமூக ஆற்றுப்படுத்தல், ஜோர்டான், அகதிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவை மதிப்பீடு

### தென்ஆபிரிக்காவின் முன்னாள் போரளிகள்: அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது எப்படி

தென்ஆபிர்க்கா தனது முதலாவது ஜனநாயகத் தேர்தலை 1994ம் ஆண்டு நடாத்தியது. 14 வருடங்கள் களிந்த பின்னரும் முன்னாள் போராளிகள் ஓர்


Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

ஆபத்துக்குள்ளாக்கப்படக்கூடிய குழுவாக இருப்பது தெளிவாகவுள்ளது. குறுகிய DDR முறை என்பதால் பெருமளவு முன்னாள் போராளிகள் தொடர்ந்தும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகிறார்கள். இக் குழுவினரின் உளசமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முனைப்பில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. இக் கட்டுரையானது, இக் குழுவினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இவர்களுக்கான இடையீடுகள், அவற்றின் பாதிப்புகள் பற்றிப் பேசுகிறது. முன்னாள் போராளிகளினதும் நிறுவனங்களினதும் கருத்துகள் சேகரிக்கப்பட்டன. கட்டுரையின் முடிவானது தென்ஆபிரிக்க முன்னாள் போராளிகளின் உளசமூக தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனில் பின்வரும் மாற்றங்கள் தேவை எனக் குறிப்பிடுகிறது- அரசியல் மட்ட ஊக்கம், ஆலோசனைகளுக்கான அதிக சந்தர்ப்பங்கள், பொருளாதார விருத்தியை முன்னுரிமைப்படுத்தல், இலகுப்படுத்தப்பட்ட உளசமூகக் குணப்படுத்தல் மற்றும் அங்கீகாரம்.

**முக்கிய சொற்கள்:** முன்னாள் போராளிகள், உளசமூக இடையீடுகள், மீழிணைத்தல்



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.